KALAM International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka.
15(2), 2022

இலங்கையில் புதிய அரசியல் யாப்புக்கான தேவைப்பாடுகள் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பை முன்னிறுத்திய ஓர் ஆய்வு

எஸ். திருச்செந்தூரன்
அரசறிவியல்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Correspondence: sthiruchchenthuran@yahoo.com

கட்டுரைச் சுருக்கம்

பிரித்தானியர் ஆட்சியின் இறுதிப்பகுதியில் இலங்கையானது, தென்னாசியா மற்றும் தென்கிழக்காசியாவில் முற்போக்கான இன நல்லிணக்கம் மற்றும் அரசியல் ஸ்திரமான நாடாக காணப்பட்டது. துரதிஷ்டவசமாக இலங்கையில் சுதேசியரிடம் அதிகாரம் கைமாற்றம் அடைந்ததை தொடர்ந்து புதிய யாப்பு உருவாக்க செயல்முறைகள் இன நல்லிணக்கத்தை கேள்விக்கு உட்படுத்துபவையாகவும், ஜனநாயகத்திற்கு சவால் விடுபவையாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக 1978ஆம் ஆண்டு யாப்பானது பௌத்த மதத்துக்கு முன்னுரிமை, தனிமனிதனிடம் அதிகாரக் குவிப்பு, சட்ட ஆட்சியை கோட்பாட்டின் அடிப்படையில் கேள்விக்கு உட்படுத்துதல், விகிதாசார பிரதிநிதித்துவத்தின் பலவீனங்கள் போன்றவற்றினால் இலங்கையில் அடிப்படை ஜனநாயக நடைமுறைகளை கேள்விக்கு உட்படுத்தியது. எவ்வாறு இருப்பினும் 1978ஆம் ஆண்டு யாப்பானது இதுவரைக்கும் 20 அரசியல் சீர்திருத்தங்களை சந்தித்த போதிலும் இலங்கையில் வாழும் சகல தரப்பினரையும் திருப்திப்படுத்துவதாக அமையவில்லை. அந்த வகையில் இவ்ஆய்வானது அரசியல் யாப்பில் உள்ள அடிப்படை அம்சங்களான அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை, சட்ட ஆட்சி, நீதித்துறை கட்டமைப்பு, ஒம்புட்ஸ்மன் போன்றவற்றை ஆழமாக ஆராய்ந்து அவற்றின் பலம், பலவீனங்களை வெளிக்கொணர்வதுடன் புதிய அரசியல் யாப்பிற்கான தேவையை தர்க்கரீதியாக முன்வைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாய்வானது அரசியல் சமூகவியல் அணுகுமுறை ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. முதல் நிலைத்தரவுகளாக அவதானிப்புக்கள், நேர்காணல்கள், வினாக்கொத்து, கலந்துரையாடல்கள் போன்றன கொள்ளப்படுகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகளாக 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு பற்றிய பல்வேறுபட்ட நூல்கள், ஆய்வு சஞ்சிகைகள், தேசிய பத்திரிகைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்ஆய்வின் ஊடாக இலங்கையில் காலத்திற்கு காலம் இடம்பெறும் அரசியல் நெருக்கடிகளுக்கும், படிப்படியாக தோல்வியடையும் பொருளாதாரத்திற்கும் யாப்பு எவ்வாறு அடித்தளமிட்டுள்ளது என கண்டறிந்து, யாப்பின் பலவீனங்களை களைந்து நிலையான அரசியல் அபிவிருத்திக்கும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் புதிய அரசியல் யாப்பின் தேவைப்பாட்டை சிபார்சு செய்கிறது.

பிரதான சொற்கள்: தேர்தல், ஒம்புட்ஸ்மன், நிறைவேற்றதிகார ஜனாதிபதி, அடிப்படை உரிமைகள்

1. அறிமுகம்

இலங்கை மிக நீண்டகாலமாக மேற்குதேச அரசுகளின் ஆளுகைக்குள் கட்டுண்டிருந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையை காலனித்துவத்திற்குள் வைத்திருந்த போதிலும் ஆங்கிலேயர்களே இலங்கையில் பெரியளவிலான அரசியல், சமூக, பொருளாதாரரீதியான மாற்றங்களைச் செய்திருந்தனர். 1833இல் கோல்புறூக் கமரன் அரசியல் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து இலங்கை, எழுதப்பட்ட அரசியலமைப்பைக் கொண்ட ஒரு நாடாகியது. இதுவரை இலங்கை எட்டு அரசியல் யாப்புக்களைக் கண்டுள்ளது. அவற்றுள் ஆறு ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். ஏனைய இரண்டும் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையர்களால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐந்தில் நான்கு பங்கு பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சி J.R.

ஜெயவர்த்தனா தலைமையில் அறிமுகப்படுத்திய 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு இதுவரை 20 அரசியல் சீர்திருத்தங்களுடன் நடைமுறையில் இருந்து வருகிறது. இருப்பினும் இவ் யாப்பானது இலங்கையில் வாழும் பல தரப்பினராலும் விமர்சனத்துக்குள்ளாகி வருகின்ற யாப்பாகக் காணப்படுகின்றது. அதேவேளை 1990களின் நடுப்பகுதியில் இருந்து இவ் யாப்பினை முழுமையாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

பொதுவாக ஒரு யாப்பில் எவை உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை நாம் வெளிப்படையாகப் பார்க்கலாம். ஆனால் அவை ஏன் உருவாக்கப்பட்டன? எப்படி உருவாக்கப்பட்டன? எவ்வாறு பிரயோகம் பெறுகின்றன? என்பவற்றை ஆராய்ந்து அறிந்து கொள்வதே பிரதானமானது. ஒரு யாப்பினை ஆய்வு செய்வோர் அதனை பின்வரும் வகைகளில் நோக்குவதுண்டு: யாப்பைப் பற்றி விபரண உரை எழுதுவது அதாவது அதில் எவை எவை உண்டு என்பதை விபரிப்பது; யாப்பிலுள்ள சட்டநுணுக்கங்கள் மற்றும் பிரச்சினைகளை விளக்குவது; யாப்பிற்கும் நடைமுறைக்கும் இடையேயான முரண்பாடுகளையும், சிறப்பம்சங்களையும் விளக்குவது; சமூக முன்னேற்றத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் அந்த யாப்பு எவ்வளவு தூரம் பொருத்தமுடையது என்பதைக் கண்டறிவதுடன் அந்த யாப்பால் ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார விளைவுகளை ஆராய்வது; போதாமைகளையும், மட்டுப்பாடுகளையும் வெளிப்படுத்தி புதிய அரசியல் யாப்பிற்கான தர்க்கரீதியான நியாயங்களை முன்வைத்தல். இவ்வாய்வானது முதலாவது விடயம் தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்வதாக அமைகிறது.

2. ஆய்வின் நோக்கம்

இலங்கை அரசியல் வரலாற்றில் அரசியல் யாப்புக்களின் முக்கியத்துவம் அதன் சிறப்புக்கள், மட்டுப்பாடுகள், போதாமைகள், மற்றும் பலவீனங்கள் போன்றவற்றை மதிப்பீடு செய்வது அரசியல் அபிவிருத்தி நோக்கில் மிகவும் அவசியமானதாகும். இப் பின்புலத்தில் 1978ம் ஆண்டு யாப்பினை அடித்தளமாகக் கொண்டு இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது. இவ் ஆய்வின் நோக்கங்களாக பின்வருவன முதன்மைப்படுத்தப்படுகின்றன. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறையில் உள்ள யாப்பு என்ற வகையில் அதன் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாட்டின் சிறப்புக்களையும், குறைபாடுகளையும் அறிதல்; நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் பலம், பலவீனங்களை அடையாளப்படுத்துவதுடன் பலவீனங்களைப் பலங்களாக மாற்றுவதற்கான முன்மொழிவுகளை முன்வைத்தல்; விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் பட்டியல் முறை, போனஸ் ஆசனமுறை, தேசியப்பட்டியல் முறை போன்றவற்றின் பொருத்தப்பாட்டினையும், போதாமைகளையும் ஆராய்தல்; நீதித்துறையின் சுயாதீனமான செயற்பாடுகள், சட்டஆட்சி, ஒம்புட்ஸ்மன் போன்றவற்றினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

3. ஆய்வின் முறையியல்

இவ் ஆய்வானது அரசியல், சமூகவியல் அணுகுமுறைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. சமூக நிறுவனங்களையும், சமூகக் குழுக்களையும், தனிமனிதர்களையும் அவற்றிற்கிடையிலான அரசியல் தொடர்புகளையும், முதன்மைப்படுத்தி ஆய்வுசெய்யும் முறையே அரசியல் சமூகவியல் அணுகுமுறையாகும். அரசியல் சமூகவியல் என்பது அரசறிவியல் சமூகவியல் ஆகியவற்றுக் கிடையிலான ஒரு இணைப்புப் பாலமாக அமைகிறது. அதனை ஹைபிரிட் (hybrid) கற்கைநெறி என அழைத்தனர். அரசியல் பிரச்சினைகள் பலவும் சமூகப் பிரச்சினையோடு தொடர்பு கொண்டவை என்ற அடிப்படையில் இரண்டு கற்கைநெறிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இவ்வாறான கற்கைநெறியினால் அரசறிவியல் மற்றும் சமூகவியல் கற்கைநெறிகள் பயன் பெறுகின்றன. இவ்வணுகுமுறையைப் பயன்படுத்தியவர்களில் மைக் ஐவர் (Mic Iver), டேவிட் ஈஸ்டன் (David Easton), அல்மண்ட் (Almond), டேவிட் ரூமன் (David Truman) போன்றவர்கள் முன்னோடிகளாவர். இந்த வகையில் மனிதன் ஒரு சமூகப் பிராணி (Man is a social animal) என்ற வகையில் அவனிடம் அரசியல் பிரச்சினைகள் எவ்வாறு தோன்றுகின்றன? அவற்றை எவ்வாறு தீர்த்து வைப்பது? என்ற யதார்த்த நோக்கோடு உருவாக்கம் பெற்றது அரசியல் சமூகவியல்

அணுகுமுறையாகும். இவ் ஆய்வானது முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகிறது.

முதல்நிலைத்தரவுகளாக அவதானிப்புகள், நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் போன்றன கொள்ளப்படுகின்றன. அத்துடன், இலக்கு வைக்கப்பட்ட குழுக் கலந்துரையாடல் (Focus Group Discussion) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு பற்றிய பல்வேறுபட்ட நூல்கள், ஆய்வுச்சஞ்சிகைகள், தேசிய பத்திரிகைகள், அறிக்கைகள், இணையத்தகவல்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

4. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

4.1 பௌத்த மதத்திற்கு முன்னுரிமை

இலங்கை பல்லின மத கலாசாரங்களை கொண்ட மக்கள் வாழும் நாடாக காணப்பட்ட போதிலும் 1978ஆம் ஆண்டு யாப்புருவாக்கத்தின் போது பெரும்பான்மை இனத்தவர்களின் மதத்திற்கு முன்னுரிமை அளித்தமை ஏனைய மதங்களை பின்பற்றுபவர்களிடையே அதிருப்தியினை ஏற்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக அரசியல் யாப்பின் 2வது உறுப்புரை 9இல், "இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க 10ஆம், 14(1)(உ)ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில், பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இலங்கையில் வாழும் எல்லா மதப்பிரிவினருடனும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டுமாக இருந்தால், பௌத்த மதத்திற்குரிய உயர் அந்தஸ்து நீக்கப்பட்டு சகல மதத்திற்கும் அரசியல் யாப்பில் சமஅந்தஸ்து வழங்கப்படல் வேண்டும்.

4.2 சட்ட ஆட்சியும் நடைமுறையும்

சட்ட ஆட்சி என்பது முக்கியமான ஜனநாயக விழுமியமாகும். பேராசிரியர் A.V. டைசி அவர்கள் சட்ட ஆட்சி (Rule of Law) பற்றி குறிப்பிடும் போது மூன்று விடயங்களை முதன்மைப்படுத்துகின்றார். (1) சட்டத்தின் முன் யாவரும் சமமாக கருதப்பட வேண்டும். (2) சட்டத்தினால் உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும். (3) சட்டம் எல்லாவற்றையும் விட மேலானதும் முதன்மையானதுமாக கொள்ளப்பட வேண்டும். எவ்வாறிருந்த போதிலும் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பானது கோட்பாட்டுரீதியில் சட்ட ஆட்சியை நிராகரிப்பதை காண முடிகிறது.

எடுத்துக்காட்டாக அரசியல் யாப்பின் அத்தியாயம் 7 உறுப்புரை 35(1)இல், "எவரேனும் ஆள் சனாதிபதியாக பதவி வகிக்கின்றபோது, அவரது பதவிமுறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது:" எனக்குறிப்பிடுகிறது. எனவே, இவ்உறுப்புரையானது சட்டத்தின் முன் யாவும் சமன் என்ற சட்டவாட்சி தத்துவத்தின் அடிப்படை அம்சத்தை மீறுகின்றது எனலாம்.

இதுதவிர உறுப்புரை 34இன் படி, நீதிமன்றம் எதிலும் எந்தத்தவறுக்காகவும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட குற்றவாளி ஒருவருக்கு கட்டற்ற ஒரு மன்னிப்பை அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பையோ வழங்கலாம். உச்சபட்சமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவருக்கு சட்டமா அதிபர், நீதியமைச்சர் ஆகியோரின் சிபார்சின் அடிப்படையில் மரண தண்டனையை இல்லாமல் செய்யலாம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய ஏற்பாடானது சட்ட ஆட்சி தத்துவத்தை முழுமையாக நிராகரிக்கப்படுவதையே வெளிப்படுத்துகிறது. எனவே, கோட்பாட்டின டிப்படையிலாவது சட்ட ஆட்சியை நடைமுறைப்படுத்தக்கூடிய புதிய அரசியல் யாப்பு அறிமுகம் அவசியமாகிறது.

4.3 நிறைவேற்று ஜனாதிபதிமுறையும் சர்வதிகார பண்புகளும்

1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி ஜனாதிபதி எதேச்சதிகார போக்கில் இயங்குவதற்குரிய அதிஉச்ச அதிகாரங்களை யாப்பினூடாக (அத்தியாயம் 7, உறுப்புரை 33) வழங்கப்பட்டுள்ளது. இவை அதிகார துஷ்பிரயோகம் மேற்கொள்வதற்கும், சர்வதிகார போக்கில் இயங்குவதற்கும் வழிவகுக்கின்றது. சட்டத்துறை சார்ந்து பாராளுமன்றத்தை கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், பாராளுமன்றத்தில் சிம்மாசன பிரசங்க உரையை நிகழ்த்துதல், பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்தல், தான் விரும்பிய ஆனால் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட மசோதா ஒன்றினை மக்கள் தீர்ப்பிற்கு விட்டு சட்டமாக்கிக்கொள்ளல் போன்றவை ஜனாதிபதி கொண்டிருக்கும் மீயுயர் அதிகாரங்களாகும்.

நிர்வாகத்துறை சார்ந்து முழுமையான அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இலங்கை ஜனாதிபதி விளங்குகின்றார். அமைச்சரவையின் தலைவராகவும், முப்படைகளின் தலைவராகவும் விளங்குகின்றார். அமைச்சரவைக்கு தேவையான அமைச்சர்களை நியமித்தல், பிரதமரை நியமித்தல், அமைச்சின் செயலாளர்களை நியமித்தல், வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு தூதுவர்களை ஏற்று அங்கீகரித்தல், போர்ப்பிரகடனம் செய்தல், சமாதானப்பிரகடனம் செய்தல், நாட்டின் பொது இலட்சினையை காப்பில் வைத்திருத்தல், வெளிநாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல் போன்றன இவரது நிர்வாகத் துறை சார்ந்த அதிகாரங்களாகும்.

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பிற்கான 20ஆம் திருத்தத்தின் 48(2)உறுப்புரையின்படி, "பாராளுமன்றத்தின் கலைப்புக்கும் பொதுத்தேர்தல் முடிவுறுத்தலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது, பிரதம அமைச்சர் இறந்தமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியைத் துறந்தமை எவ்வாறிருப்பினும், அமைச்சரவையானது அமைச்சரவையின் உறுப்பினர்களாக ஏனைய அமைச்சரவையின் அமைச்சர்களுடன் பொதுத் தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும் நிறைவேற்றவும், புரியவும் என அத்தகைய அமைச்சர் ஒருவரை சனாதிபதி நியமிக்கலாம் அல்லது அவற்றைத் தாமே பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம். அத்தகைய வேறு அமைச்சர் எவரும் இல்லாவிடின், பொதுத் தேர்தல் முடிவடையும்வரை அமைச்சரவையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் சனாதிபதி தாமே பிரயோகிததலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்."எனக் குறிப்பிட்டுள்ளது.

எனவே அதிகாரமானது தனி ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியானவர் பிரதமர், அமைச்சர் என நிர்வாகத்தின் இரண்டாம் கட்ட உயர் அதிகாரங்களையும் கபளீகரம் செய்து எதேச்சதிகாரப் போக்கிலும், அதிகார துஷ்பிரயோக செயற்பாட்டிலும் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புகளை வழங்குகின்றது எனலாம். இது தவிர அரசியல் அமைப்பில் 20வது திருத்தத்தின் 85வது உறுப்புரையில் பின்வரும் விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. "சனாதிபதி, அவரது தற்றுணிபின்படி, பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்டமூலத்தை மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்ப்பிக்கலாம்." எனக் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய ஏற்பாடானது இலங்கை பாராளுமன்றத்தின் சட்ட ஆக்கும் தனித்துவ அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்தி, பாராளுமன்றத்தை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்ட பலவீனமான அமைப்பாக மாற்றியுள்ளது.

4.4 விகிதாசார பிரதிநிதித்துவமும் பலவீனங்களும்

1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தனிமாற்று வாக்களிப்பு முறை மூலமும், பாராளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கட்சி பட்டியல் மூலமும், அதேவேளை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலப்பு தேர்தல் முறை மூலமும் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்தேர்தல் முறை பல்வேறு குறைபாடுகளை கொண்டதாக காணப்படுகின்றது. குறிப்பாக சாதாரண மக்களால் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாத தேர்தல் முறையாக காணப்படுகிறது. மேலும், வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கும் குறிப்பாக தேர்தல் அலகின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும் பெரிதாக இருப்பதனாலும், ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு பல பிரதிநிதிகள் இருப்பதாலும் வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்பு குறைவடையும். இதனால்

பிரதிநிதிகள் மக்கள் தொடர்பான தமது பொறுப்பை தட்டிக் கழிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் என்பது யாழ்ப்பாண நிர்வாக மாவட்டம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு பரந்த பிரதேசமாக இருக்கின்ற போது மக்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்பு அதிகரிக்கும் எனலாம்.

மேலும், இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியன தனி மனிதனின் பிரதிநிதித்துவ உரிமையை கட்டுப்படுத்துகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கயேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் நேர்காணலின் போது குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக ஜனாதிபதி தேர்தலில் ஒருவர் போட்டியிட வேண்டுமாக இருப்பின் குறித்த நபர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவோ, அல்லது தற்போதைய பாராளுமன்ற உறுப்பினராகவோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவராகவோ இருத்தல் வேண்டும். இந்த நிபந்தனையானது மிகவும் கடுமையான நிபந்தனையாகும். இதனால் சாதாரண மக்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது.

மேலும், பாராளுமன்றத் தேர்தலை பொறுத்தவரையில் விகிதாசார பிரதிநிதித்துவ கட்சி பட்டியல் முறையின் பிரகாரம் எந்த ஒரு கட்சியினதும், அல்லது சுயேச்சை குழுவினதும் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத தனி ஒரு மனிதன் தனித்து சுயேட்சையாக தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையை இம்முறை மறுக்கிறது. அத்துடன் இத்தேர்தல் முறையில் பட்டியலின் பெயர் ஒழுங்கு வரிசையை கட்சி தலைமைத்துவமே தீர்மானிப்பதால் கட்சி தலைவரின் எதேச்சாதிகார செயற்பாட்டிற்கு வாய்ப்பு அளிக்கிறது. இது தவிர பட்டியல் முறையின்படி வேட்பாளரை விட கட்சிக்கு முன்னுரிமை அளித்து வாக்களிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதனால் மக்கள் அதிகம் விரும்பாத ஒருவர் கூட தேர்தலில் வெற்றி பெறும் நிலை ஏற்படுகிறது. மேலும், இடைத்தேர்தலுக்கு வாய்ப்பில்லாததால் இடைக்காலத்தில் அரசாங்கம் தொடர்பாக மக்களின் அபிப்பிராயங்களை ஜனநாயக வழியில் அறிந்து கொள்ள முடியாதுள்ளது. இது தவிர தேசிய பட்டியல் முறை நடைமுறையில் தகுதியற்றவர்கள் பாராளுமன்றத்திற்கு பின் கதவால் நுழைவதற்கு வாய்ப்பை வழங்கியுள்ளது.

4.5 அடிப்படை உரிமைகள்

1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசின் அடிப்படை உரிமைகள் ஏற்பாடும் பலவீனமானதாகவே உள்ளது. குறிப்பாக உயிர்வாழ்வதற்கான உரிமை, சொத்து சேகரிப்பதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை, உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்கான உரிமை போன்ற முக்கியமான உரிமைகள் உள்ளடக்கப்படவில்லை. மேலும், மனித உரிமை மீறப்படின் தனிநபர் மாத்திரமே நிவாரணம் தேட முடியும். மாறாக நிறுவனமாகவோ குழுவாகவோ அல்லது ஸ்தாபனமாகவோ நிவாரணம் தேட முடியாமை ஒரு குறைபாடாகும். இது தவிர மனித உரிமை மீறல் சம்பவம் நிகழ்ந்து ஒரு மாத இடைவெளிக்குள் நிவாரணம் தேடப்பட வேண்டும் எனவும் அக்காலம் நீடிக்கப்பட முடியாமையும் முக்கிய குறைபாடாகும். அதாவது இங்கு நிர்வாகத்துறையில் மனித உரிமை மீறலை மேற்கொள்பவர் நிர்வாக கட்டமைப்புக்குள் இருப்பதனால் பலமானவராகவும் மாறாக மனித உரிமை மீறலால் பாதிக்கப்படுபவர் தனி நபராக இருப்பதால் பலவீனமானவராகவும் காணப்படுவார். இந்நிலையில் ஒரு மாதம் என்ற கால எல்லையானது பலவீனமானவரை மேலும் பலவீனப்படுத்துவதாக காணப்படுகின்றது. அத்துடன் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) மற்றும் அவசரகால சட்டம் (ER) ஆகியவை மக்களின் அடிப்படை உரிமைகளை கேள்விக்கு உட்படுத்தி அர்த்தமற்ற தாக்குவதாக காணப்படுகின்றது.

இரண்டாம் குடியரசு யாப்பின் 156வது உறுப்புரையின் படி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் பதவியும் (Ombudsman) பெயரளவிலானதாக காணப்படுகின்றதே தவிர நடைமுறையில் போதிய பயன்பாட்டிற்குரியதாக அமையவில்லை. உதாரணமாக ஒம்புட்ஸ்மன் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்து அறிக்கயிடலாமே தவிர தண்டனை வழங்கும் அதிகாரம் ஒம்புட்ஸ்மனிற்கு வழங்கப்படவில்லை.

5. முடிவுரை

ஐக்கிய தேசிய கட்சியினரும் அதனது முன்னாள் தலைவர் J.R. ஜெயவர்த்தனாவினதும் விருப்பங்களுக்கு ஏற்ப அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாம் குடியரசு யாப்பு ஆழமான நோக்கில் மக்களின் நலன்களை முன்னிறுத்தி உருவாக்கப்படவில்லை எனலாம். இதன் காரணமாக யாப்பானது இதுவரைக்கும் 21 அரசியல் திட்ட திருத்தங்களை கண்டுள்ளது. இப்பின்புலத்தில் இலங்கையின் நிலையான அரசியல் அபிவிருத்திக்கும், அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் புதிய அரசியல் யாப்பு மிக மிக அவசியமானதாக காணப்படுகிறது. இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களும் நிலை மாறுகால நீதியை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பு கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். இது தவிர இலங்கையில் காலத்திற்கு காலம் இடம்பெறும் அரசியல் நெருக்கடிகளுக்கும், பொருளாதார தோல்விகளுக்கும் யாப்பே அடித்தளம் இட்டுள்ளது. எனவே பலவீனங்களை தவிர்த்து புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் என்பது இலங்கையின் தவிர்க்க முடியாத தேவையாக உள்ளது. அவ்வாறு உருவாக்கப்படும் யாப்பானது பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் எடுத்தல் வேண்டும்.

இலங்கையில் வாழும் எல்லா இன மத பிரிவினருக்கும் சம அந்தஸ்து அளிப்பதாக இருத்தல் வேண்டும்; சட்ட ஆட்சி (Rule of Law) தத்துவத்தை உள்ளடக்கியதாக காணப்படல் வேண்டும்; நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து பாராளுமன்றத்தின் சட்டவாக்க இறைமையை உறுதிப்படுத்த வேண்டும்; அடிப்படை உரிமைகள் ஏற்பாடு விரிவாக்கம் செய்யப்பட வேண்டும்; விகிதாசார பிரதிநிதித்துவ பலவீனங்கள் களையப்பட்டு சிறந்த தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்; ஒம்புட்ஸ்மனின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்; வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் அற்ற அரசியல்வாதிகள் மீழழைத்தல் ஏற்பாட்டின் ஊடாக பதவி நீக்கம் செய்யப்பட வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சிபார்சுகளின் ஊடாக இலங்கையின் எல்லா இனப்பிரிவினரையும் திருப்திப்படுத்தக் கூடிய ஓர் அரசியல் யாப்பு அறிமுகப்படுத்துவதன் ஊடாக இலங்கையில் நிலையான அரசியல் அபிவிருத்தியினையும், நல்லாட்சியையும் ஏற்படுத்த முடியும்.

உசாத்துணைகள்

Cooray, L.J.M. (1984), Constitutional Government in Sri Lanka, Colombo Lake House book.

Jajawardena Kumari, (1985), Ethnic and class conflict in Sri Lanka, Centre for Social Analysis, Dehiwala.

Keethaponcalan, S.I. (2006), Sri Lanka Peace Process, 2002-04: Another opportunity Lost. Regional Studies XXIV (2), Colombo.

Loganathan Ketheeshwaran (1996), Sri Lanka: Lost opportunities, Past Attempts at Resolving Ethnic Conflict , Colombo,. Centre for Policy Research and Analysis.

Wilson,A.J., (1994), S.J.V.Chelvanayakam and the Crisis of Sri Lanka Tamil Nationalism 1947-1977, C.Hurst & Co (Publishers) Ltd. London.